# மருதானை பள்ளிவாசல் பகுதியில் பொலிஸார் கண்ணீர்புகை பிரயோகம்; கலகத்தில் பலர் காயம்

(கொழும்பு)
மருதானையில் நேற்று கலகம் செய்த முஸ்லிம்களைத் தடுத்த கலகத் தடுப்பு பொலிசாருடன் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் மோதிக் கொண்டனர்.
இதன்போது பொலிசார் முஸ்லிம் இளைஞர்களை சந்து பொந்துகளூடாகத் துரத்தித் துரத்தி அடித்தனர்.
பொலனறுவையில் நடந்த கொலைச் சம்பவத்தை கண்டித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பினால் நேற்று

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 8 இதழ் 256
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24 — 10 — 1992

## நாடாளுமன்றக் கூட்டம் எதிர்க்கட்சிகளால் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)
நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தை எதிர்க்கட்சிகள் அனைத்தும் பகிஷ்கரித்தன.
முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினால் நேற்று கொழும்பில

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில்குண்டுவெடிப்பு பெண் படுகாயம்

(கொழும்பு)
கொழும்பில் நேற்று பலத்த இராணுவ, பொலிஸ் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் மிக சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததினால் பலர் காயமடைந்துள்ளதாகவும் ஒரு பெண் ஆபத்தான நிலையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்குப்பகுதியில்

# 4 பொம்மர்கள் குண்டு வீச்சு 2 பெண்கள் பலி; இருவர் காயம்

(புலோலி)

**வடமராட்சிப் பகுதியில் நேற்றுக்காலை நான்கு பொம்மர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் இரு பெண்கள் பலியானார்கள். இரு பெண்கள் படுகாயமடைந்தனர். வீடுகள், தென்னை, பனை, மாமரங்கள் என்பன பலத்த சேதமடைந்தன. கால்நடைகளும் பலியாகின.**

நேற்றுக்காலை 9-30 மணியளவில் வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள குடத்தனை மேற்கு, மணல்காடு வீதி விளாங்காடு என்னுமிடத்தில் நான்கு குண்டுவீச்சு விமானங்கள் பலத்த குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதலினால் மண் குடிசை வீடொன்றில் இருந்த தி. தெய்வானை வள்ளிப்பிள்ளை (75 வயது) என்ற வயோதிபப் பெண் ஸ்தலத்திலேயே மரணமானார்.

பலத்த காயங்களுக்குள்ளான வே. செல்லம்மா (70 வயது), மு. சிவபூரணம் (36 வயது), மு. உதயசுதா (ஜெயகுமாரி) (16 வயது) ஆகிய மூவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

இவர்களில் மு. சிவபூரணம் மந்திகை ஆஸ்பத்திரியில் மரணமானார். இவரது மகளான உதயசுதா (ஜெய்குமாரி) யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஆபத்தான நிலையில் எடுத்துச் செல்லப்பட்டார்.

மற்றைய வயோதிபப்பெண்ணான செல்லம்மா மந்திகை ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகிறார்.

(61-160-51-150)

## நீர்கொழும்பு சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 11 தமிழ் இளைஞர் விபரம்

(யாழ்ப்பாணம்)
நீர்கொழும்பு சிறைச்சாலையில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பதினொருபேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
அவர்கள் விபரம் வருமாறு: கே. கணபதிப்பிள்ளை, வி. சிவசுப்பிரமணியம், எஸ். ரூபகுமார, ரி. மோகன்ராஜ்,

(4ம் பக்கம் பார்க்க)

## இளவாலையிலிருந்து ஆசிரியை விடுவிப்பு

(உடுப்பிட்டி)
இளவாலையில் ஒருமாதகாலமாக இராணுவத்தினரின் பிடியில் இருந்த இளவாலையை சேர்ந்த இளம் ஆசிரியை ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டார்.
இவர் கடந்த மாதம் 21ம் திகதி இளவாலையில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்

(4ம் பக்கம் பார்க்க)

## நாகர்கோவிலில் காவல்நிலையம் நேற்று திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ காவல்துறையின் நாகர்கோவில் பிரதேசத்திற்கான காவல் மணிமனை நேற்றுக்காலை கடற்புலிகளின் தளபதி கங்கை அமரனினால் திறந்து வைக்கப்பட்டது.
இந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழதேசியக்கொடியை தளபதி கங்கை அமரனும், காவல்துறைக் கொடியை

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும கலகத்தடுப்பு பொலிஸார் பொதுமக்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பு நகரிலும் தெற்கின முக்கிய நகர்ப்புறங்களிலும் நேற்று கலகத் தடுப்புப் பொலிசார் பொதுமக்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கினர்.
இக்கடமையில் விசேட அதிரடிப் படையும், இராணுவமும் ஈடுபடுத்தப்பட்டதாகவும் சி. ஐ. டி. பொலிசார் சாதாரண உடையில் கடமைகளை மேற்கொண்டதாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியின் அரசியல் பிரிவு மூடப்பட்டது

(கொழும்பு)
கொழும்பு மருதானையில் உள்ள சுதந்திரக்கட்சி தலைமையக கட்டிடத்தில் இயங்கி வந்த கட்சியின் அரசியல் பிரிவு நேற்று முன்தினம் மூடப்பட்டது.
ஆனால் இக்கட்டிடத்திலுள்ள கட்சியின் தொழிற்சங்கம் இதர பிரிவுகளின் அலுவலகங்கள் வழமை போல் செயற்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் விஜேதுங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டும்

(கொழும்பு)
கிழக்கிலங்கையில் நடந்துவரும் தாக்குதல் சம்பவங்களை தடுத்து நிறுத்த தவறியமைக்காக பிரதமர் டி. பி. விஜேதுங்க பாதுகாப்பு இணை அமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டுமென 'ஐலண்ட' பத்திரிகை தெரிவித்துள்ளது.
பிரதமர் விஜேதுங்கவுக்கு வயது முதிர்ந்துள்ளதால் பாதுகாப்பு சம்பந்தமான பணியை திறமைமிக்க ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அப்பத்திரிகை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கிழக்கு மாகாணத்திற்கென புதிய பாதுகாப்புத் திட்டம்

### - நேற்று முதல் அமுல் -

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்திற்கான புதிய பாதுகாப்புத் திட்டம் சம்பந்தமான பணிப்புரைகள் படைகளுக்கு விடுவிக்கப்படவுள்ளதாக அமைச்சரணில் தெரிவித்துள்ளார். இப்புதிய திட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.
பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கான வழிகளை காண்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மேலும் கிழக்கு மாகாண எல்லைப்புற சிங்கள, முஸ்லிம் கிராமங்களின் பாதுகாப்புத்

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.
யாழ். மாவட்டத்தில் இருபத்திரண்டு வெற்றிடங்களும் கிளிநொச்சியில் நான்கும்,

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### முடக்கொத்தான் குளிகை

முடக்கொத்தான் இலையில் தயாரித்த Welpenla capsules கிடைக்குமிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி- 6870)

### தேவை

Toffee Cutter (Hand-operating) வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். ரேஸ்றலைன் இன்டஸ்றீஸ், 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(ஏ-2530)

### மணமகளா / மணமகனு

எம்மிடம் வெளிநாட்டு பெண்களும் உள்நாட்டு மணமக்களும் சைவ போசன விரும்பிகளும் இருக்கிறார்கள். சந்திப்பு ஞாயிறு காலை மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம். (சி-6906)

### புலமைப் பரிசில் 1993

ஆண்டு - 4 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் 1993 மாதிரிப் பரீட்சை (தமிழ் கணிதம் ஆங்கிலம்) 24-10 92 சனி மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6912)

### தமிழ் அகராதி

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, மற்றும் கலை நாவல், இலக்கியம், சிறுகதை, அரசியல், வரலாறு போன்ற தரமான நூல்களும் சலனம், சுபமங்களா, துளிர் போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலயம், 405, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (சி-6913)

### தீபாவளி வெளியீடுகள்

ராகு, கேது செவ்வாய் மாற்றங்கள், பாடசாலைக் கொப்பிகள், புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. மொடர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடிச் சந்தி, மது புத்தகசாலை, கொக்குவில் சந்தி
(சி-6917)

### விற்பனைக்கு

Bridal Saree, அமெரிக்கன் ஜோஜெற் ரூபா 250/-. தேக்கு, சுந்தோர் மேசை, பளபளப்பான கம்பளங்கள், சோழியன் மண்வெட்டி, மேசை மெழுகு சீலை மெத்தைக் கவர், Medical Kitbag, பீங்கான், கிளாஸ் வகைகள், எவர்சில்வர் உபகாரப் பொருள்கள்: 7, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி. (சி 6918)

### சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பன்னாலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்து கொக்குவில் மேற்கில் வசித்துவரும் கந்தையா காங்கேசன் என்பவரின் சைக்கிள் வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தபோது திருடப்பட்டுள்ளது. (சு)

### நிவாரணம் பெற ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தமது தொழில் பரப்பிலிருந்து இடம்பெயர்ந்த 'இ' அட்டை வைத்திருப்பவர்கள் தமது நிவாரணக் கிளை ஒன்று இணுவிலிலும், கிளை இரண்டு சிரணிச் சந்தியிலும் கிளை 3 மருதனார்மடத்திலும் பெற்றுக்கொள்ளலாம் என்று பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பம் 1992-11-26 ஆம் தேதிவரை என்னால் பெறறுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில்விரிவுரையாளர் (மருத்துவம் / உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்) (மருத்துவம்சாராத) தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்)/ தற்காலிக உதவிவிரிவுரையாளர் (மருத்துவம் சாராத)

குறிப்பு: உயிரிரசாயனவியல்/உயிர்த்தொழில் நுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்ரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்**

**விரிவுரையாளர்**

(மருத்துவம்): ரூபா 4500 - 10 X 200 - 6.500/- (மாதமொன்றுக்கு) மருத்துவபீடத்தின் விரிவுரையாளர் ஒருவர்முதல்நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் அதாவது 4500/- ரூபாவிலும இரண்டு படி அதிகமான சம்பளத்தில 4900/- ரூபாவில் வைக்கப்படுவர்.)

**உதவி விரிவுரையாளர்**

(மருத்துவம் சாராத)

(தகுதிகாண் : ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டுக்கு.

ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்ததும் ரூபா 4500 — 10 — 200 — 6.500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் துறைத் தலைவரினதும் பீடத் தலைவரினதும் சிபார்சின் அடிப்படையில் 4 500/- ரூபா சம்பளப் படியைத் துணைவேந்தர் குறித்தொதுக்குவார்.

**தற்காலிக விரிவுரையாளர்**

(மருத்துவம்); ரூபா 4,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

**தற்காலிக உதவி விரிவுரையாளர் (மருத்துவம் சாராத)**

ரூபா 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

### தகைமைகள்:

**விரிவுரையாளர் மருத்துவம்**

(1) எம். பி. பி. எஸ் பட்டத்தில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு அல்லது.

(2) எம். பி. பி எஸ், இறுதித் தேர்வில் சித்தியுடன் உரிய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் தகைமை அல்லது.

(3) அங்கீகரிக்கப்பட்ட அனுபவத்துடன் எம். பி பி எஸ். இறுதித் தேர்வில் சித்தி (இப்பகுதியின் கீழ் பரிசீலனை செய்யப்படும் ஆளெவரையும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் பேரவையின் சிபார்சுடன் நியமிக்க முடியும்.)

**உதவி விரிவுரையாளர்**

(தகுதிகாண்)

மருத்துவம் சாராத

1 உரிய பாடத்தில் சிறப்புப்பட்ட மொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு; அல்லது

2. உரிய பாடத்தில் சிறப்புப்பட்ட மொன்றில் இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு): அல்லது

3. உரிய பாடத்தில் சிறப்புப் பட்டத்தில் சித்தியுடன் உரியபாடத்தில் அங்கீகரிக்கப் பட்டபட்டப் பின் பட்டம்.

4. உரிய உயர் கல்வி நிறுவனத்தின் சிபார்சின் அடிப்படையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் வேறு அத்தகைய தகைமைகள்.

**குறிப்புகள்:**

(அ) (3) இதன் கீழ் தகுதிபெற்றவிண்ணப்பதாரியொருவர் (1) அல்லது (2) இதன்கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி எவரும் இல்லாவிட்டால் மட்டுமேநியமனத்திற்காகப் பரிசீலனை செய்யப்படுவார்.

(ஆ) (2) இதன் கீழ் தகுதி பெற்ற விண்ணப்பதாரியொருவர் 1) இதன் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரி எவரும் இல்லாவிட்டால் மட்டுமே நியமனத்திற்காகப் பரிசீலனை செய்யப்படுவர்.

(இ) தேவையான பட்டப்பின் தகைமைகளையும், அனுபவத்தையும் கொண்டுள்ள விண்ணப்பதாரியை ஏற்றவாறு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இற்கு நியமிப்பதற்கு கவனித்துப் பார்க்கப்படும்.

பின்வரும் மாற்றுத் தகைமைகளும் பரிசீலனை செய்யப்படும்.

1. எம். பி. பி. எஸ். பட்டம் அல்லது அதற்குச் சமமான உயர் தகைமைகள்.
2. பி. டி. எஸ். அல்லது பி. வி. எஸ். சி. அல்லது பி. எஸ். சி. (உயிரிரசாயனவியல்) அல்லது முதலாம் இரண்டாம வகுப்பு ஆனர்சுடன் பி. எஸ். சி. (இரசாயனவியல்) பட்டம்
3. உயிரிரசாயனவியல்/ அணுத்திரண்ம உயிரியல்/உயிர்தொழில் நுட்பத்தில் எம். எஸ். சி பட்டத்துடன் பி, எஸ். சி, (சிறப்பு/பொது) பட்டம்.

விண்ணப்பம் இப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23 X 10 ச. மீற்றர் அளவுடைய கடித உறை இணைத்தனுப்புதல்வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியனவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் அலுவலர்கள் மூலம் விண்ணப்பித்தல்வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-10-17 (எ-2528)

## எங்களுக்கும் ஒரு தீபாவளி

கஸ்ரோ நினைவு
தீபாவளிப் பொழுது

காலம்: 1992-10-25 ஞாயிறு தீபாவளித்தினம்
இடம்: திருநெல்வேலி நிறைவாழ்வு இல்ல கலா மண்டபம்
காலை: 10-30—11-30 பண்ணிசை அரங்கு: தேவார இசைமணி திருஞானசம்பந்தன்
மாலை: 3-30—7-00 மணிவரை சிறப்புக் கலை நிகழ்ச்சிகள்

சிறப்புக் கலை நிகழ்வுகள்:

நல்லதோர் வீணை செய்தே
**செல்வி சர்மிலா பாலேந்திரன்**

எங்களுக்கும் ஒரு தீபாவளி
**நிறைவாழ்வு இல்லச் சிறுர்**

நடனம் ஆடினுர்
**செல்வி சுகந்தி மகேந்திரராஜாவின் மாணவிகள்**

கண்ணீரைத் துடைத்துக்கொள்
ஆக்க இசை அரங்கம் - ஆக்க இசைக் கலைஞன்
**என். சண்முகலிங்கன்**

சிறுவர் திரைப்படம்

சிறப்பு விருந்தினர்கள்
**திரு. செ. பத்மநாதன்**
திட்டப்பணிப்பாளர் யாழ் செயலகம்
**திரு. இ. பரதன்**
பொறுப்பாளர் நிதர்சனம்
**திருமதி க. சிவசிதம்பரம்**
பிரதிஆணையாளர் சமூக சேவைத் திணைக்களம்

இந்தப் பொழுதை அர்த்தப்படுத்தவும் எங்கள இல்லமும் உளமும் நிறைய அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரார்த்தனைகளுடன்
**நிறைவாழ்வு இல்லச் சிறுர்கள்,**
சைவ வித்தியா விருத்திச்சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-6919)

## நீங்காத நினைவின்

# ஐந்தாம் ஆண்டு



**அமரர் க. செல்வராஜா**
(யாழ். போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர்)

| | |
|---|---|
| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
| (16-01-1932) | (21-10-1987) |

அன்புத் தெய்வமே! ஆசை அப்பாவே! ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டகலாத துயரத்தில் ஆழ்கிறோம். பேரன் பிறந்திருந்தும் தூக்கி மகிழ நீங்கள் இல்லையே அப்பா. அப்பா நீங்கள் இல்லாமல் எங்கள் துயரத்தை யாரிடம் கூறுவோம். நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் எங்கள் கண்ணீர்ப் பூக்களை அர்ப்பணிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மகன்,
மருமகள், பேரன் தனுஷன்.

188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6907)

## ★ வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு சுகாதார பணிப்பாளரும் 5 பிரதி கல்விப் பணிப்பாளரும் நியமனம்

(உடுவில்)

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கென பொதுவான ஒரு மாகாண சுகாதாரப்பணிப்பாளரும், இம்மாகாணத்தில் அமைய உள்ள ஐந்து மாவட்டங்களுக்கு பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர்களும் ஜனவரி முதல் நியமிக்கப்பட்டு சுகாதாரசேவைகளை நடைமுறைப் படுத்தவுள்ளனர்.

உள்ள திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகியன தனித்தனி மாவட்டங்களாகவும் மொத்தம் ஐந்து மாவட்டங்கள் செயற்பட உள்ளன.

இவற்றுக்கு தனித்தனி யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஒரு மாவட்டமாகவும், வவனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகியன இணைந்து ஒரு மாவட்டமாகவும், கிழக்கில் பன்முகப்படுத்தப்பட உள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பதின்நான்கு பிரதேச செயலகங்களுடன் இணைந்ததாக 14 பிராந்திய சுகாதார நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன. பிரதி சுகாதார பணிப்பாளர் நியமிக்கப்படுவர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுகாதார சேவைகள் ஜனவரி மாதம் முதல்

ஒவ்வொரு பிராந்திய சுகாதார நிலையங்களும் தத்தம் பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளை பராமரிப்பதுடன் நோய்த் தடுப்பு சேவைகளையும் மேற்கொள்ளும்.

இவற்றுக்கு பொறுப்பாக பிராந்திய சுகாதார பிரதி பணிப்பாளர்கள் நியமிக்கப் படுவர்.

(109)

## கால்நடைகள் திருட்டு அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் தற்போது ஆடு, மாடு, கோழி முதலான கால்நடைகள் களவாடப்பட்டுவருவருவது அதிகரித்துள்ளது.

இங்கு ஒரு நாள் இரவு மாத்திரம் 8 ஆடுகள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் திருடர் கோஷ்டி ஒன்று பகல் நேரங்களில் வீடு வீடாகச் சென்று, ஆடு மாடுகள் விற்பனைக்கு உள்ளனவா என்று கேட்டு விசாரித்துச் செல்கின்றனர். பின்னர் திட்டமிட்டு இரவு நேரங்களில் வீட்டுக்காரருக்குத் தெரியாமல் அவற்றைப் பிடித்துச் செல்கின்றனர். (139)

## நடமாடும் வங்கிச் சேவை

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளையின் நடமாடும் வங்கிச் சேவை வட இலங்கை சர்வோதயத்தின் ஏற்பாட்டில் இன்று 24 ம் திகதி சனிக்கிழமை மூளாயிலும், இம்மாதம் 31 ம் திகதி சனிக்கிழமை உடுவிலிலும், நவம்பர் மாதம் 07 ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள சர்வோதய நிலையங்களினூல் நடாத்தப்பட ஏற்பாடாகியுள்ளன.

சிறுவர் சேமிப்பு, சாதாரண சேமிப்பு, நிலையான வைப்பு, அறக்கொடை போன்ற எல்லா வங்கிக்கணக்கினையும் அன்றைய தினங்களில் ஆரம்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

மத்தியஸ்தர்

## ஒன்றுகூடல் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் 'ஒன்றுகூடல்' வைபவம், நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி வைபவத்துக்கு திரு வை. தனீஸ்வரன் பிரதம அதிதியாகவும், திரு.எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

இவ்வைபவத்தின்போது மேற்படி சங்கத்தினர் அண்மையில் புதிய மத்தியஸ்தர்களுக்காக நடத்திய பரீட்சையில் சித்தியடைந்த 14பேருக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுமென்று இச்சங்கத்தின் செயலாளர் திரு. அ. தேவராசா தெரிவித்தார். (வி)

## வவுனியா, கிளிநொச்சியில் கொள்ளை கோஷ்டிகள் பெரும் அட்டகாசம்

(வட்டுக்கோட்டை)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வருகின்ற யாழ்ப்பாணப் பயணிகளின் பணம், பொருட்கள், நகைகள், வவுனியா, கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் போக்குவரத்துத் தடைகள் ஏற்படும போது, விஷயம் தெரியாதவர்களை ஏமாற்றி திட்டமிட்ட கொள்ளைக் கோஷ்டிகள் பொருள, பணம், நகைகளைப் பறித்துச் செல்லும் நிலை அதிகரித்து வருகின்றது.

அப்பாவிப் பொதுமக்கள் பலர் இக்கொள்ளைக் கோஷ்டிகளின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி, லட்சக்கணக்கில் பொருட்களைப் பறிகொடுத்துச் செல்வதனை அறியக்கூடியதாக இருக்கின்றது. (13)

## சீனி விநியோகம

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 3 பேருக்குக் குறைந்த குடும்பத்துக்கு அரைக் கிலோ சீனியும், 3 பேருக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு ஒரு கிலோ சீனியும் வழங்கிவருகிறது. (சு)

பௌதிகவியல்

## பரீட்சை அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

26ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் க.பொ.த (உ/த) பௌதிகவியல்-II பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ் கல்வித்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன, பாடசாலைப் பரீட்சார்த்திகளது அனுமதி அட்டைகளை தத்தமது கோட்டக் கல்விப் பணிமனையிலிருந்து சேகரித்துப் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கும்படி அதிபர்கள் வேண்டப்படுகின்றனர்.

வடமராட்சி, பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட விலாசத்தைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அவ்வக் கோட்டக்கல்வி அலுவலகத்திலும், வேலணை (தீவக) கோட்டப் பரீட்சார்த்திகள் யாழ். கல்வித்திணைக்களத்திலும் தத்தமது அனுமதி அட்டைகளை நேரில் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஏனைய கல்விக் கோட்ட விலாசதாரப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் இடப்பட்டுள்ளன.

## பஜனை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தெற்கிலுள்ள பகவான் ஸ்ரீசத்யசாயி சமித்தி மண்டபத்தில், நவம்பர் மாதம் 7ந் திகதி மாலை 5-15 மணி தொடக்கம் நவம்பர் 8ந் திகதி மாலை 5-30 மணி வரை அகிலஉலகஅகண்டநாம பஜனை நடைபெற உள்ளது.

புஷ்பம், சரம், மாலை முதலியவற்றைக் கொடுக்க விரும்பும் அடியார்கள், சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு முன்பதாக சமிதியில் கொடுக்குமாறு வேண்டப்படுகின்றனர். [சு]

## மன்னார் ஆயர் யாழ். வருகிறார்

(அரியாலை)

மன்னாரில் புதிதாக நியமனம் பெற்ற ஆயர் பேரருட் திரு. கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை எதிர்வரும் நவம்பர் மூன்றும் திகதி யாழ். புதிய ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் யாழ். நகர் வரவுள்ளார். நவம்பர் 5-ந் திகதி மாலை 5-00 மணிக்கு யாழ். மறைமாவட்ட மக்களால் மாபெரும் வரவேற்பு வைபவம் நடைபெறவுள்ளது. (59)

## கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்வக் கதிர்காம கோவில் கந்தசஷ்டி உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

30ம் திகதி வெள்ளிக்கிழமை விசுவரூப தரிசனமும், 31 ம் திகதி சனிக்கிழமை சூரன் போர் உற்சவமும், நவம்பர் 1ம் திகதி பாரணையுடன் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெற்று விரதம் பூர்த்தியடையும். (க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவினர் ஐக்கிய நாடுகள் சபை தினத்தையொட்டி பேச்சுப் போட்டி ஒன்றை காரியாலயத்தில் இன்று 24 ம் திகதி நடாத்துகின்றனர். (சு)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று 24 ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ)

★

(உடுவில்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை இந்துசமயம், சமூகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமையும், 26 ம் திகதி திங்கட்கிழமையும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

மருதனார்மடம் கோட்டத்தைச் சேர்ந்த சகல கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அறிவித்துள்ளார்.

இந்துசமயப் பயிற்சி வகுப்பு சமூகக்கல்வி பாடப் பயிற்சி வகுப்பு இன்று 24 ம் திகதியும் 26ம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும். [109]

## விதை உருளைக்கிழங்கு பதிவு செய்தவர்களுக்கு மட்டும் வழங்கப்படும்

(பண்டத்தரிப்பு)

உடுவில் கம நலச் சேவை நிலையத்தில் விதை உருளைக் கிழங்கு கேட்டு விண்ணப்பித்த விவசாயிகள், ஒரு அந்தர் உருளைக்கிழங்கிற்கு 4000ரூபா வீதம் செலுத்திப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து விரைவில் கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு விதை உருளைக்கிழங்கு வந்து சேரவிருப்பதாகவும், இப்பணத்தைச் செலுத்தியவர்களுக்கு இந்த விதை உருளைக்கிழங்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## கல்விச் சுற்றுலா

(நல்லூர்)

யாழ். கல்வித் திணைக்கள அனுசரணையுடன் வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் வண்ணை வைத்தீஸ்வராக் கலலூரியில் பத்திரிகையாளர் பயிற்சியை மேற்கொள்ளும் பயிலுநர்கள் அண்மையில் வடமராட்சிப் பகுதிக்கான கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

வடமராட்சியிலுள்ள எழுத்தாளர்கள், அறிஞர்கள் பலரையும் சந்தித்ததுடன் தமது துறைக்கு உதவக்கூடிய நகர ஆக்கம், வடமராட்சியின் இன்றையநிலை போன்றனவற்றையும் பலரினதும் உதவியுடன் அறிந்துகொண்டு இரண்டுநாட்களின்பின் திரும்பினர். (158)

## இராசி பலன்

24-10-1992

சனிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 08)

திரயோதசி காலை 6-49 வரை: சதுர்த்தசி பி. இ. 4-49 வரை, அத்தம் பி. இ. 12-40 வரை. இராகுகாலம் காலை 9-02 முதல் 10-32 வரை. சுபநேரம் மாலை 3.02 முதல் 4-32 வரை.

மேடம்; தனயோகம், கீர்த்திப் பிரவாகம், காரியசித்தி.

இடபம்; மாமன் உறவு, தொழில் சிறப்பு, மகிழ்ச்சி.

மிதுனம்: தகாதவர்கள் நேசம், மனப் போராட்டம், வெறுப்பு.

கடகம்; அலட்சியப் போக்கு, அந்நிய வாசம், காரியத் தடை.

சிங்கம்: தர்க்கவாதம், பிடிவாதம், உறவினர் பகை.

கன்னி: தொழில் சிரமம், அனுவசியப் பகை, குடும்பச் செலவு.

துலாம்: குடும்ப மனஸ்தாபம், பணமூலமான துன்பம். அலைச்சல்.

விருச்சிகம்: மனத்தைரியம், தெய்வதரிசனம், தொழில் லாபம்

தனுசு: புதிய முயற்சி, கடன் வரவு, பெண் உதவி.

மகரம்: அடிமைப்படல், மனைவியால் பகை, தகராறு.

கும்பம்; பழிச் சொல், வயிற்றுவலி, பதற்றமடைதல்.

மீனம்: சுபகாரியம், அந்நிய உதவி, நற்பணி.

— ஜோஸ்யர்

## இந்தியப் படையினுல் உயிரிழந்த 21 பேருக்கு அஞ்சலி

யாழ். ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

இந்திய இராணுவத்தின் தாக்குதலினுல் 87 அக்டோபர் 21ம் 22ம் திகதிகளில் உயிரிழந்த யாழ் போதனு வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் உட்பட 21 பேரின் 5-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி அனைத்து ஊழியர்களாலும் யாழ்.போதனுவைத்தியசாலையில் 21ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

காரியாலய உட்பகுதியில் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின.

முதலில் இந்தியப் படையினர் சுட்டுக்கொண்டிருக்கையில் மயிரிழையில் உயிர் தப்பிய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் திரு.பொன்னம்பலம் குத்துவிளக்கினை ஏற்றி வைத்தார்.

அடுத்து படையினரால் சுடப்பட்டுக் காயமடைந்த ஊழியர்களான திரு. இராஜரட்ணம், திரு. கிருபாகரன் ஆகியோர் உயிரிழந்தோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலைகளை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் பெற்றோர்கள், மனைவி, மக்கள் 21சுடருக்கு தீபமேற்றினர்.

2 நிமிட மௌன அஞ்சலியை தொடர்ந்து அனைத்து ஊழியர்கள் சார்பில் நினைவுச்சொற்பொழிவினை ஊழியர் திரு. மு. ஈழத்தமிழ்மணி நிகழ்த்தினுர். [56]

இடம் பெயர்ந்த

## மக்களின் குறைபாடுகள்

[ஆனைப்பந்தி]

தொல்புரம் பாணுவெட்டியிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாமிலுள்ள மக்களின்குறைபாடுகள் பற்றி அண்மையில் முகாம் நிர்வாகத் தலைவர் பொ. கணேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது. போருட் நிறுவன திட்ட இணைப்பாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர், சங்கானை காவல் பணிமனைப் பொறுப்பாளர், தொல்புரம் மேற்கு கிராமசேவையாளர். இடம் பெயர்ந்த தீவகமக்கள் நலன் காக்கும் கழக தலைவர், செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (101)

# ஜெயலலிதா தமிழக அரசைக்கலைத்து புதிய தேர்தல் நடத்த முயற்சி

## குமரி அனந்தன் தகவல்

[சென்னை]

தமிழக சட்டப்பேரவையை கலைத்துவிட்டு புதிதாக தேர்தல் நடத்த முதல்வர் செல்வி ஜெயலலிதா முயற்சித்து வருவதாக குமரி அனந்தன் தெரிவித்துள்ளார்.

இதன் முன்னேற்பாடாக தேர்தல் அதிகாரிகளையும் முதலமைச்சர் சந்தித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

இதேவேளையில் தமிழகத்தில் காங்கிரசை பலப்படுத்தவேண்டுமென்றும் எவ்வேளை வந்தாலும் காங்கிரஸ் ஆட்சியை அமைக்க தேர்தல் முயற்சிக்கவேண்டுமென்றும் திரு. கருப்பையா மூப்பனார் தெரிவித்துள்ளார்.

# கப்பலில் செல்ல அனுமதி தேவை இல்லை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையில் உள்ளவர்கள் கப்பல் மூலம் கொழும்புக்குச் செல்வதற்கு இனிமேல் கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி தேவையில்லை என்று யாழ். அரசாங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தானே தீர்மானித்து இவர்களை கொழும்புக்குக் கொண்டுசெல்லலாம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (சு)

## வளலாய் பகுதியிலிருந்து நேற்று ஷெல் தாக்கு

(வடமராட்சி)

வளளாய் பகுதியிலிருந்து நேற்று இரவு இராணுவத்தினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாக கூறப்படுகின்றது.

நேற்று இரவு 7-30 மணியளவில் இராணுவத்தினர் திடீரென பரா வெளிச்சங்களைப் பாய்ச்சி இந்தப்பகுதியில் ஷெல் தாக்குதல் நடத்தினர்கள். இதனால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடியதாகவும் கூறப்படுகின்றது. [வி-51]

# தீபாவளியை முன்னிட்டு 1250 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு

(கொழும்பு)

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆயிரத்து 250 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளித்து விடுதலைசெய்யுமாறு ஜனாதிபதி பிரேமதாசா பணிப்புரை வழங்கியுள்ளார்.

நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீதின் சிபாரிசின் பேரில் இந்தப் பொதுமன்னிப்பு அளிக்கப்படுகிறது.

இதன்படி அபராத தொகை செலுத்ாதவர்களை விடுதலை செய்வதோடு சிலருக்கு தண்டனைக்காலமும் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மரண தண்டனையும் ஆயுட்கால தண்டனையாக மாற்றப்படும்.

## தமிழீழ மீட்புநிதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்புநிதி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரியில் இன்றுகாலை 9 மணி முதல் 12 மணிவரையும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நெல்லியடி ம. மா. வியில் இன்று பிற்பகல் 2 மணிமுதல் 5 மணிவரை பெறப்படும்.

## நாடாளுமன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தப்பட்ட வேலைநிறுத்த அறைகூவலுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாவே நாடாளுமன்றக் கூட்டத்தை எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே முகமாக பகிஷ்கரிப்பு செய்தனர் என சுதந்திரக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

நேற்று, கொழும்பு மாநகரின் மத்தியில் உள்ள அரச கட்டிடத்தின் ஒன்றின் முன்னாலேயே மேற்படி குண்டு வெடித்ததாகவும், பலத்த பாதுகாப்பின் மத்தியிலும் இக்குண்டு எப்படி அக்கட்டிடத்தின் முன்னால் வெடித்தது என்பதை பொலிசார் தீவிரமாக விசாரணை செய்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## ஸ்கந்தஷஷ்டி திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் (ஸ்ரீ கதிரேசன் கோவில்) ஸ்கந்த ஷஷ்டி திருவிழா நாளை மறுதினம் 26ம் திகதி திங்கட்கிழமை முதல் 31ம் திகதி சனிக்கிழமை வரை மேற்படி ஆலயத்தில் நடைபெறும்.

தினமும காலை 7-15 மணிக்கு ஸ்நபனாபிஷேகமும், 8-30 மணிக்கு விஷேச பூஜையும், மாலை 4-00 மணிக்கு ஷண்முகார்ச்சனையும், 5-00மணிக்கு வசந்தமண்டப பூஜை திருவுலாவும் இடம்பெறும். 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00மணிக்கு திருக்கல்யாணமும் வெளிவீதி திருவுலாவும் நடைபெறும். (கே)

## உதைபந்தாட்ட போட்டி முடிவில் கைகலப்பு; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் முடிவில் ரசிகர்களிடையே பலத்த மோதல் ஏற்பட்டதினால் விளையாட்டு வீரர்களும், பார்வையாளர்களும் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

மைதானத்துக்குள் ஏற்பட்ட கைகலப்பு பின்பு வீதிகளிலும் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்தக்கைகலப்பில் ஈடுபட்ட பலர் படுகாயங்களுக்கும் சிறு காயங்களுக்கும் ஆளானார்கள்.

மோதலில் ஈடுபட்டோர் பின்னர் தமிழீழக் காவற்துறையினரால் கைதுசெய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (வி-159)

## மண்ணெண்ணை, சீனி விநியோகம்

[ஆனைப்பந்தி]

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் பாவனையாளர்களுக்கு மண்ணெண்ணை, சீனி என்பன விநியோகிக்கப்படுகின்றன. பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணை லீற்றர் முப்பத்தி எட்டு ரூபா வீதமும், ஒரு கிலோ சீனி 27 ரூபா 75 சதம் வீதமும் சங்கத்தின் கே. கே. எஸ். வீதியில் உள்ள இருகிளைகளில் விநியோகிக்கப்படுகின்றன. (110)

## சுதந்திரக்கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும்.

கட்சியின் தலைவியான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உத்தரவையடுத்தே அரசியல் பிரிவுமூடப்பட்டது. இத்துடன் இங்கு வைக்கப்பட்டிருந்த முக்கிய தஸ்தாவேஜுகள் திருமதி சிறிமாவின் வீட்டுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுறது. (வி-சி)

## கப்பலில் ம. எண்ணெய்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்களுக்கு மண்ணெண்ணையை ஒரு கப்பலில் அனுப்புவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தமது உதவி ஆணையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். (க)

## இளவாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு கொன்வென்ட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியையான செல்வி என். யோசேப் 25- வயது) என்பவரே செஞ்சிலுவைச் சங்க மூலம் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துவரப்பட்டார். (15061)

## மருதானை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தகோரிக்கையையடுத்து தொழுகைக்கு வந்த முஸ்லிம்கள் ஆயுதங்களுடன் மருதானை பள்ளிவாசலுக்கு வந்ததாகவும் அவர்களை கலைக்க முனைந்த கலகப் பொலிசாருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பொலிசார் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியதாகவும் தொழுகை இடம்பெற்ற பள்ளிவாசல் போர்க்களமாக மாறியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கலகத்தின்போதுபொலிசார் தரப்பிலும் முஸ்லிம்கள் தரப்பிலும பலர் காயமடைந்தனர். கற்கள் தாராளமாக வீசப்பட்டன. போக்குவரத்து பஸ்களுக்கும் எறியப்பட்டன.

இச்சம்பவத்தை அடுத்து மருதானை பஞ்சிகாவத்தை கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. இதனால் நகரில் பதற்றம் நிலவியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் சுலோக அட்டைகளுடன் ஒரு கோஷ்டியினர் மேற்படி பள்ளிவாசலுக்குள் நுழைய முற்பட்டபோது அங்கிருந்த முஸ்லிம்கள் அவர்களைத் தடுத்து நிறுத்த முற்பட்டபோதே கலகம் வெடித்ததாகவும்கூறபபடுகிறது.

சுலோக அட்டைகளுடன் வந்த கோஷ்டியினர் அரசுக்கு ஆதரவான கோஷ்டி எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

செப்டம்பர் மாதம் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு கட்ட நிவாரணம், மீண்டும் நான்கு கட்டங்களாக ஒக்டோபர் மாதம் வழங்கவேண்டுமென்று புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் யாழ். அரசாங்க அதிபருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். (சு)

## கொழும்பிலும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை செல்லவேண்டாமென பல பகுதிகளிலும் முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த வேண்டுகோள் வெற்றிபெறவில்லை. தெற்கில் பாடசாலைகளுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு பாடசாலைகள் முழு நேரமும் இயங்கியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பல்கலைக்கழக வகுப்புகளை பகிஷ்கரிக்குமாறும் மாணவர்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்திருந்தது.

தெற்கில் பலபகுதிகளிலும் அரச அலுவல்கள் வழமைபோல் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கிழக்கு

(1-ம பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக விசேட கூட்டமொன்று அடுத்தசில தினங்களில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கை விரைவில் ஆரம்பமாகவுளளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் இரண்டும், முல்லைத்தீவில் ஆறும், மட்டக்களப்பில் பதின்மூன்று வெற்றிடங்களும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு பெயர் பட்டியலைத் தந்துதவுமாறு மக்கள் வங்கித் தலைவர் திடடமிடல் அமைச்சைக் கேட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன (க)

## நாகர்கோவிலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவல்துறைப்பொறுப்பாளர் திரு. பா. நடேசனும் ஏற்றி வைத்தனர்.

இதைத்தொடர்ந்து தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி கலை, கடற்புலிகள் மூத்த உறுப்பினர் திரு முத்தண்ணா ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைக்க தளபதி கங்கை அமரன் காவல்பணிமனையைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கடற்புலி மகளிர் படைத்தளபதி செல்வி நளாயினி, கடற்புலி யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. மறவன் உட்பட இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பணிமனையில் தாளையடி, உடுத்துறை, செம்பியனபற்று, குடாரப்பு. மாமுனை, அமபன், குடத்தனை, மணற்காடுஆகிய இடங்களில் வாழும் பொதுமக்கள் தமது புகார்களைப பதிந்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [51]

## நீர்கொழும்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஜே. கிரிஸ் விநேசராஜ், பி. சயீவன், கே. ரவீந்திரா, ஏ றுபேட், ஏ. ராஜேந்திரன், எஸ். இராசதுரை, ரி. சுப்பிரமணியம.

இதேவேளை புத்தளம்சிறைச்சாலையில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எவரும் தடுத்துவைக்கப்படவில்லையென்றும் அனுராதபுரம் மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் உள்ள யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தடுத்து வைக்கப்பட்டோரின் விபரங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் யாழ் அரசாங்க அதிபர் அதிபர் கா. மாணிக்கவாசகருக்கு தெரிவித்துள்ளார். (சு)


## "முரசொலி" ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள்

மேற்படி நிறுவனத்தில் 92-08-20 அன்று வரையில் பணியாற்றிய சகல ஊழியர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகள் 92-10-24 இன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு "முரசொலி" பணிமனையில் வழங்கப்படும். மேற்படி கொடுப்பனவுகளை அன்றைய தினமே தவறாது பெற்றுக்கொள்ளுமாறு "முரசொலி" ஊழியர்கள் வேண்டப்படுகின்றனர்.

கலைப்பாளர்,
முரசொலி பதிப்பகம்.

(ஏ-2532) (தனிவரைவு)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81